விலை: 40.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 106 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 21 திங்கட்கிழமை (04.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

# நாடு முழுவதும் நேற்று ஊரடங்கு!

வடக்கில் முடக்கம்



தெற்கில் ஆர்ப்பாட்டம்



15

## இன்று காலையிலிருந்து ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமற்ற நிலையில், அரசுக்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்பலைகள் ஏற்பட்டிருந்தன. 15

## ஜனாதிபதியின் வீட்டின் முன் ஒருவர் தற்கொலை

(கொழும்பு)

மிரிஹானவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டின் முன்பாக நேற்று ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள் 15

### ஊரடங்கிலும் உச்சமடைந்த மக்கள் போராட்டம்

# அமைச்சர்கள் அனைவரும் கூண்டோடு இராஜினாமா

## பதவி விலக பிரதமர் மறுப்பு

(கொழும்பு)

பிரதமர் தவிர்ந்த அமைச்சரவை அமைச்சர்கள் அனைவரும் தமது பதவி விலகல் அறிவிப்பை பிரதமருக்கு வழங்கியுள்ளனர் என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



15

### ராஜபக்ஷ அரசுக்குள் தொடரும் நெருக்கடி

## இடைக்கால அரசை அமைக்க ஜனாதிபதி, பிரதமர் இணக்கம்



### முன்னாள் அமைச்சர் வீரவன்ஸ அறிவிப்பு

(கொழும்பு) தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்காக நாட்டில் இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் சாதகமான பதில் கிடைக்கப் பெற்றுள்ளதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

### 4 மாகாணங்களிலுள்ள

## பாடசாலைகளுக்கு இன்று முதல் விடுமுறை

(கொழும்பு)

வடக்கு, தெற்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று முதல் பாடசாலை விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டாலும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் வழமைபோன்று பாடசாலைக்கு சமுகமளிக்க 15

### அரசியலமைப்பின் பிரகாரம்

## பிரதமர் பதவி விலகாவிடின் அமைச்சரவை கலையாது

### சட்டவல்லுநர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் பதவி விலகவில்லை என்றால், சட்ட ரீதியாக அமைச்சரவை கலைக்கப்படாது என்று சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசியலமைப்பின் விதி 49 இன் பிரகாரம் இந்த வியாக்கியானத்தை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் அமைச் 15

## இந்த அரசை வேரோடு பிடுங்கி வீச வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் ஆவேசம்

(கொழும்பு)

ராஜபக்ஷ அரசு நாட்டுக்கு ஒரு கெடுவினையாகும். காட்டுமிராண்டித்தனமான இந்த அரசை மக்களின் ஆணையுடன் வேரோடு பிடுங்கி வீச வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசுக்கு எதிராக சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சி 15

### பாகிஸ்தான்

## பாராளுமன்றம் கலைப்பு

(இஸ்லாமபாத்)

நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தோல்வி நிச்சயம் என்ற சூழலில் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்குச் செல்லும் முடிவை இம்ரான் கான் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், இம்ரான் கானின் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 - 02 - 1941



மறைவு
03 - 04 - 2022

## சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்

( சாரதி 7071 கார், சீரணி அரிசி ஆலை, லொறி சாரதி, சண்டிலிப்பாய் )

இளவாலை முள்ளானையைப் பிறப்பிடமாகவும் பண்ணாகம் தெற்கு, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் நேற்று (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் இளைய மகனும் சண்முகலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் உமாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குருபரன், ஜெயசீலன் மற்றும் மயூரதன் (ஜேர்மனி), பகீரதன் (கட்டார்), பரணீதரன் (ஆசிரியர் -யா/அராலி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கண்மணி மற்றும் சந்தனம், காலஞ்சென்ற பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகராணி, நீரஜா, கௌரி, காஞ்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுசியா, தனேஸ், கஜன், மிலான், அபிலன், விதுசன், வைஸ்ணவி, லதுசன், பிவிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் அபிசன், ஆயுசன், அர்விசன், ஆதித்தியா, ஆதுசன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.04.2022) திங்கட்கிழமை நண்பல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4117)

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்.
077 716 2685
தகவல் :-
குடும்பத்தினர்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
21 . 06 . 1983



உதிர்வு
04 . 04 . 2019

## அமரர் பாலேந்திரநாதன் சுபேஸ்

பழுத்த இலைகளும் வாடிய மலர்களும்
கனிந்த கனிகளும் இருக்க
தளிர்களையும் பூக்களையும் பிஞ்சுகளையும்
உலுப்புகிறான் ஈவிரக்கமற்ற காலன்
தாய்க்கு நல்ல தனயனாக சோதரிக்கு
தோள்கொடுக்கும் தோழனாக வாழ்ந்திருந்தாய்
உறவுகளை மகிழ்வித்து மகிழ்ந்திருந்தாய்
மீளா பயணத்திற்கு ஏன் விரைந்தாய்?
நிதமும் கண்ணீரில் கரைகின்றோம்
ஆண்டுகள் மூன்றென்ன
ஆறுமோ எம் பெருந்துயர்!!!

(C-4110)

கிளான், துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
தங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி கோபாலன் தவமணி

(சகுந்தலா)

தோற்றம்
20.06.1949

மறைவு
29.03.2022



கூவில், புலோலி தென்மேற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலன் தவமணி அவர்கள் கடந்த 29.03.2022 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி மற்றும் செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற கிட்டிணன் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற கோபாலனின் பாசமிகு மனைவியும் லீலாவதி, இரத்தினசிங்கம் (லண்டன்), செல்வரத்தினம், சரோயா, இளவதனி (லண்டன்), பத்மநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கிருஷ்ணானந்தன் (பிரான்ஸ்), பவானி (பிரான்ஸ்), கோபாலகிருஷ்ணன் (லண்டன்), சிவாகிருஷ்ணன் (பிரான்ஸ்), கிருஷ்ண மோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகதுர்க்கா (பிரான்ஸ்), கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), கிருஷ்ணசுபரதி (லண்டன்), கீர்த்திகா (பிரான்ஸ்), ரேகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அனோஜன், அனோஜினி, அஜந்தன், அருண்குமார், அபிராமி, அச்சுதன், அஜனி, அரவிந்தன், வைஸ்ணவி, வைஷாளி, வைஷ்ணி, ஆதிரிஜன், ஆதவன், றெமோஜன், கிருஷ்ணி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் இயோனாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.04.2022) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் (இலங்கை நேரப்படி) 1 Avenue du Marechal Juih 95503 Gonnesse எனும் இடத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் 95 rue Marcel sembat 93430 Viilletaneuse எனும் முக வரியில் அமைந்துள்ள மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
கிருஷ்ணானந்தன் (ஆனந்தன்) - மகன் +33647854485 (பிரான்ஸ்)
பவானி (மகள்) + 33769696426 (பிரான்ஸ்)
கோபாலகிருஸ்ணன் (ஜீவன்) மகன் +447412655205 (லண்டன்)
சிவாகிருஷ்ணன் (சிவா) மகன் + 33603673374 (பிரான்ஸ்)
கிருஸ்ணமோகன் (மோகன்) மகன் +447429200392 (லண்டன்)
செல்வகிருஸ்ணன் (செல்வம்) பெறாமகன் + 94778695557
கிருஸ்ணகுமார் (குமார்) மருமகன் +33648291906 (பிரான்ஸ்) (10899)


கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி.
தகவல்: குடும்பத்தினர்
021 226 0045

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டாவே வீட்டுக்குச் செல்!

# இலங்கை அரசிற்கு எதிராக அவுஸ்திரேலியாவில் போராட்டம்





(மெல்போர்ன்) கோட்டாபய ராஜபக்ஷ அரசுக்கு எதிராக அவுஸ்திரேலியா வாழ் இலங்கையர்கள் நேற்று மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மெல்போர்ன் - பெடரேஷன் சதுக்கத்திற்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இலங்கை ஜனாதிபதி மற்றும் அவரது தலைமையிலான அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கோஷங்களை எழுப்பியவாறும் பதாதைகளைத் தாங்கியவாறும் அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

கோட்டாபயவே வீட்டுக்குச் செல், இலங்கையர்களுடன் நாங்கள் இருக்கிறோம், திருடிய பணத்தை திருப்பிக் கொடு, வடக்கில் ஆக்கிரமித்த காணிகளை விடுவி, இந்த அரசிடம் இருந்து இலங்கையர்களைக் காப்பாற்றுங்கள் என பல கோஷங்கள் இந்தப் போராட்டத்தில் எழுப்பப்பட்டன.

இதேவேளை, பிரிஸ்பேன், சிட்னி, கான்பெரா, அடிலெய்ட் மற்றும் ஹோபார்ட் ஆகிய இடங்களில் மேலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இணையத்தள பக்கம் ஊடுருவப்பட்டது?

(கொழும்பு) இணைய ஊடுருவிகள் மூலம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இணையத்தள பக்கம் ஊடுருவப்பட்டுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், ஜனாதிபதி ஊடகப்பிரிவு அல்லது தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவினால் இதுவரையில் உத்தியோகபூர்வமாக இவ்விடயம் தொடர்பில் அறிவிக்கப்படவில்லை.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பேச்சாளர் ஒருவரிடம் வினவிய போது, இது செயற்கையாக ஏற்பட்ட ஒன்று என தெரிவித்தார். (நி-5)

## ஐ.சி.ரி.ஏ தலைவர் பதவி விலகினார்



(கொழும்பு) இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவரகத்தின்(ICTA) தலைவர் ஓசத சேனாநாயக்க பதவி விலகியுள்ளார்.

நேற்று அவர் தனது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## முட்டை விலை உயரும் சாத்தியம்

(கொழும்பு) பண்டிகை காலம் நெருங்கியுள்ள நிலையில் ஒரு முட்டையின் விலை 50 ரூபாவாக உயர்வடையும் சாத்தியங்கள் காணப்படுவதாகச் சந்தை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் முட்டை உற்பத்தியானது 40 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என அகில இலங்கை கோழி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோழி தீவனங்களுக்கான தட்டுப்பாடு மற்றும் காலநிலை காரணிகளினால் இவ்வாறு உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதுடன், சிறிய அளவிலான கோழிப் பண்ணைகள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளது.

இதனால் சிறிய முட்டை உற்பத்தியாளர்கள், தங்களது உற்பத்திகளிலிருந்து விலகிக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது முட்டை 30 முதல் 33 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டையின் விலை 50 ரூபாவினை எட்டும் சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(நி-5)

## அரசிற்கு எதிராக பேராதனை பல்கலை மாணவர்கள் போராட்டம்

### கண்ணீர்ப் புகை மூலம் கலைக்க முற்பட்ட பொலிஸார்



(கொழும்பு) ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள போதிலும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களால் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் தலையில் சிவப்பு துணி கட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்கள் பேராதனை பல்கலைக்கழக வளாகத்திலிருந்து பேராதனை கலஹா சந்தி வரை பேரணியாகச் செல்ல முற்பட்டனர்.

அங்கு மாணவர்களை செல்லவிடாது தடுப்புக்களை ஏற்படுத்தியுள்ள பொலிஸார், மாணவர்கள் கட்டுப்பட மறுத்துள்ள நிலையில் அவர்கள் மீது தண்ணீர்த் தாரைத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

## அவசரகால சட்டம் நடைமுறையிலுள்ள போது சமூக ஊடகங்களை முடக்க முடியாது

### சட்டத்தரணி லால் விஜயநாயக்க

(கொழும்பு) அவசரகால சட்டம் நடைமுறையில் உள்ள வேளை சமூக ஊடகங்களை முடக்கும் சட்டம் எதுவும் நாட்டில் இல்லை என சட்டத்தரணி லால் விஜயநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் சமூக ஊடகங்களில் கருத்துக்களை வெளியிடுவதற்கு மக்கள் அச்சமடையக்கூடாது என ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவசரகால சட்டம் குறித்து ஜனாதிபதி விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலில் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்துவது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J.D.C.A வெற்றிக்கிண்ணம் விக்ரோறியன்ஸ் அணி முன்னிலை

J.D.C.A இருபது-20 வெற்றிக்கிண்ணம் தொடரில் 2 ஆவது தகுதிகாண் போட்டியில் விக்ரோறியன்ஸ் அணி, ஜொலிஸ்ரார் அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று பிரிவு B யில் முன்னிலையில் உள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 150 ஓட்டங்களை பெற்றனர்.

சந்தோஸ்-42, கோமைந்தன்-23, கிரிஷாந்-14, பிரசன்னா-11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விக்ரோறியன்ஸ் அணி சார்பாக பிரதீஸ்-03, குகஷாந்தன், பிரியங்கன், சிவனுஜன் தலா 02 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

150 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய விக்ரோறியன்ஸ் அணி 17.5 ஓவர்களில் 05 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களை பெற்றனர்.

சிவனுஜன்-22, துஜாவன்-28, சங்கர்-15, செந்தூரன்-21, பிரனீதாமன் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களை பெற்றனர் களத்தடுப்பில் ஜொலிஸ்ரார் அணி சார்பாக உமேஸ் கோபிராம், பிரசன்னா, அருண்குமார் தலா-01 விக்கெட்டினை கைப்பற்றினர். (4)



நியூசிலாந்தில் நடைபெற்ற மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி 7 ஆவது முறையாக அவுஸ்திரேலிய உலகக் கிண்ணத்தை வென்று வரலாறு படைத்துள்ளது.

# வவுனியா வீர வீராங்கனைகள் கராத்தே போட்டியில் வெற்றி



வடக்கு கிழக்கு மாகாண ரீதியாக நடாத்தப்பட்ட கராத்தே போட்டியில் வவுனியா வீர வீராங்கனைகள் நேற்று முன்தினம் வெற்றி பெற்று பதக்கங்களை தமதாக்கி கொண்டனர்.


இலங்கை கராத்தே சம்மேளத்தினால் வடக்கு கிழக்கு இரு மாகாணங்களும் இணைந்து நடத்திய கராத்தே சுற்றுப் போட்டி திருகோணமலை maka izer indoor stadium இல் நடைபெற்றது.



இப்போட்டியில் வவுனியாவை சேர்ந்த 11 வீரர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இப் போட்டியில் வவுனியா dinesh martial arts school வீர வீராங்கனைகள் பதக்கங்களை சுவீகரித்து வவுனியா மண்ணிற்கு பெருமையை சேர்த்துள்ளனர். (4-6-299)

# மரண அறிவித்தல்



## ஐயாத்தம்பி அழகரத்தினம்

பிறப்பு : 23.03.1940 இறப்பு : 03.04.2022

ஐயனார் கோவிலடி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்தம்பி அழகரத்தினம் அவர்கள் நேற்று (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி ஐயாத்தம்பி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லம்மா அவர்களின் அன்பு கணவரும் இந்திராதேவி, மகேந்திரம், கமலாதேவி, இந்துமதி, கிருஷ்ணகுமார், உதயகுமார், மஞ்சுளாதேவி, கீதா, ராதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஜோகமலர், செல்வரத்தினம், மகேந்திரம், நித்தியா, சிவயோகநாதன், கோகுலன், முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஜினி - ஆதர்சன், டிலக்ஷன், வினுயன், சுஜீபன், டினோயன், டினோயா, சுஜீபா - ஸ்ரீமமணன், கிருத்திகா, மெல்கின், நோவா, ஓமியா, கோசிகன், பவளயன், யசிக்கா, நிபிஷா, பவினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.04.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக வேவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4116)

ஐயனார் கோவிலடி, கொடிகாமம். 076 972 4264 தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை குறைவடையலாம் என அச்சம்;

# பாராளுமன்ற கூட்டத் தொடர் ஒத்திவைப்பு?

(கொழும்பு)

**பாராளுமன்றத்தில் ஆளும்கட்சியின் பெரும்பான்மை குறைவடையலாம் என்ற அச்சம் காரணமாக, அதை சமாளிக்க பாராளுமன்ற கூட்டத்தொடரை குறுகிய காலத்துக்கு ஒத்திவைப்பது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**


பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் முக்கிய வேலைத்திட்டங்கள் இல்லை எனத் தெரிவித்து புதுவருடத்தை முன்னிறுத்தி இவ்வாறு ஒத்திவைக்க முடியுமென அரச உயர் மட்டத்தில் உள்ள சிலர் சுட்டிக்காட்டி உள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் ஆளும் அரசின் பெரும்பான்மையை இல்லாமல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தங்களது பெரும்பான்மையை சபாநாயகருக்கு எழுத்து மூலம் காட்டி அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டு வருவதற்கு இந்தக்குழு எதிர்பார்த்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## திடீர் ஊரடங்கால் சாப்பாட்டுக்கு வழியில்லை மகரகமவில் போராட்டம்





(கொழும்பு)

திடீர் ஊடரங்கு அறிவிப்பால் சாப்பிட உணவின்றி நிர்க்கதியில் இருப்பதாகத் தெரிவித்து மகரகமவில் வீதிக்கு இறங்கி மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு குவிக்கப்பட்ட பொலிஸாருடன் மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

திடீரென அறிவிக்கப்பட்ட ஊரடங்கால் எங்களால் உணவுப் பொருட்களைப் பெற முடியவில்லை. நேற்று கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. இந்நிலையில் உணவைப் பெற நாங்கள் எங்கு செல்வது? என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆவேசமாகக் கேள்வி எழுப்பினர்.

ஏற்கனவே காஸ் இல்லை, மண்ணெண்ணெய் இல்லை. உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இந்நிலையில் திடீர் ஊரடங்கால் மேலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (நி-5)


# கண்ணீர் அஞ்சலி



**அமரர்.திருமதி.இரத்தினேஸ்வரி மனோகரன்**

கோண்டாவில் வடக்கு கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது சிறிய தாய் திருமதி. **இரத்தினேஸ்வரி மனோகரன்** அவர்கள் 01.04.2022 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அவர்களின் மரண செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சி.ஜெயக்கொடி குடும்பம்**
**(பெறாமக்கள்)**

(10898)


# இராசிபலன்

**04.04.2022**
**பங்குனி 21, திங்கட்கிழமை**
**திருதியை பிற்பகல் 2.36 மணிவரை**
**பரணி பிற்பகல் 3.03 மணிவரை**
**சுபநேரம்- 12.10-1.40 மணிவரை**
**இராகுகாலம் - 7.40-9.10 மணிவரை**
**கார்த்திகை விரதம், சக்தி கணபதி விரதம்**
**சந்திராஷ்டமம்- அத்தம், சித்திரை.**

**வளவன்**

**மேஷம்**: திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்**: சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**மிதுனம்**: பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம்.

**கடகம்**: கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு, தலைமைப்பொறுப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

**சிம்மம்**: எதிர்பார்ப்புகள் அகன்று வியாபார விருத்தியுண்டு, மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி**: ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு தேவை.

**துலாம்**: பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**: பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், கெளரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு**: உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏறபடலாம், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்.

**மகரம்**: பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பெற்றோர் மீதான பாசம் கூடும் நாள்.

**கும்பம்**: எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதை தவிாப்பது நல்லது, வழிபாட்டால் குதூகலம் காணும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மீனம்**: வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்ளையடித்த பணத்தை எடுத்தால்

# நாடு கடனிலிருந்து மீளும்

## மாக்சிச லெனினிசக் கட்சி

(குப்பிழான்)

**தமிழ் மக்களை யுத்தத்தினால் கொன்றொழித்து தமிழ்மக்களின் வாழ்வை நாசமாக்கியவர்களே தற்போது ஆட்சிப் பீடத்தில் உள்ளனர். யுத்தத்தின் போது கோடி கோடியாக மக்களின் பணத்தை வாரிக் கொடுத்துவிட்டு இன்று 51 பில்லியன் கடனாளியாக இந்த நாட்டை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளனர் எனப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி யின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார்.**

பொருட்களின் விலையேற்றத்திற்கும், எரிபொருட்களின் தட்டுப்பாட்டிற்கும் எதிராக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வடபிராந்தியச் செயலணியின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம் பெற்றது. ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கோட்டா- மகிந்த ஆட்சியின் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகியிருக்கின்றன. இந்நிலையில் இந்த ஆட்சி மோசமானதொரு சர்வதிகார ஆட்சியாகக் காணப்படுகிறது. தற்போதைய நிலையில் எமது மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை, வேதனைகளை எல்லோரும் அறிவார்கள். நாடு முழுவதும் வரிசை வரிசையாக மக்கள் பெற்றோலுக்கும், டீசலுக்கும், அரிசிக்கும், பருப்புக்கும் காத்திருக்க வேண்டிய கேவலமானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய குடும்ப ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் கோடி கோடியாக மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து உள்நாட்டு நிறுவனங்களிலும், வெளிநாட்டு வங்கிகளிலும் சேகரித்து வைத்திருக்கின்றார்கள். இவர்கள் இவ்வாறு சேகரித்து வைத்திருக்கும் பணத்தை எடுத்தாலே எம் நாட்டின் தற்போதைய 51 பில்லியன் கடனைத் தவிர்க்க முடியும் எனத் தெரிவித்தார். (4-5-18)



வவுனியா, பாவற்குளம், அல் - அமீன் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 8 வகுப்பறைக் கொண்ட 2 மாடிக் கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான், வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராயா ஆகியோர் இணைந்து அதனை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தனர்.

(படம் : வசந்தரூபன்)

## சனத்தொகைக்கு ஏற்ப நகரங்கள் விரிவுபடுத்தப்படும்

(சாவகச்சேரி)

மக்கள் சனத்தொகைக்கு ஏற்ப நகரங்களை விரிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

பல்பரிமாண நகர திட்டத்திற்குள் உள்ளீர்கப்பட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்ட சாவகச்சேரி பேருந்து நிலைய திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சன நெரிசல் நிறைந்த இடமாக யாழ் மாவட்டம் மாறி வருகிறது. அதற்கேற்ப நகரங்களை விரிவுபடுத்தி வசதிகளை மேம்படுத்த வேண்டிய தேவை நிலவுகிறது. அதன் ஓர் அங்கமாகவே இந்த நகரங்கள் அபிவிருத்தி



செய்யப்படுகின்றன.

பல சவால்களுக்கு மத்தியில் இன்று இந்த அபிவிருத்தி திட்டங்களை மக்கள் மயப்படுத்தியுள்ளோம். இந்த செயற்திட்டம் நிச்சயம் மக்களுக்கு பயனுள்ளதாக அமையும். சாவகச்சேரி நகரம் மேலும் பல கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டு எதிர்காலத்தில் சர்வதேச நியமங்களுக்குரிய நகரமாக சாவகச்சேரி நகரம் மிளிரும் என அவர் தெரிவித்தார். (4-5-30)

## யாழ். , கிளிநொச்சியில்

# 20 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பனைசார் உற்பத்தியில் தங்கியுள்ளது

## அரச அதிபர் மகேசன்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருபதாயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பனைசார் உற்பத்தியில் தங்கியிருப்பதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் பனை சார் உற்பத்திகளில் ஈடுபடும் குடும்பங்களுக்கான உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், வடமாகாணத்தில் கணிசமான குடும்பங்கள் பனையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் ஜீவனோபாயம் நேரடியாகவும்-மறைமுகமாகவும் பனை சார் உற்பத்திகளுடன் தொடர்புடையதாக காணப்படுகிறது.

பனை அபிவிருத்திச் சபை உற்பத்தியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கும் சேவையை விஸ்தரித்து வருகிறது.

பனை அபிவிருத்திச் சபையின் நடவடிக்கை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதோடு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் பங்களிப்பாற்றி வருகிறது என தெரிவித்தார். (4-5-30)



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு நல்லூர் லியோ கழகம், அரியாலை திருமகள் இளைஞர் கழகம் மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள Food Gallery மண்டபத்தில் நடைபெற்றது. (படம்: ரவிசாந்)



(யாழ்ப்பாணம்)



(மன்னார்)



(கிளிநொச்சி)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 6 மணி முதல் இன்று திங்கட்கிழமை காலை 6 மணி வரை அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் வடக்கின் பல பகுதிகள்வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டது. இதே வேளை பிரதான சந்திகள், வீதிகளில் பொலிஸார் ஆங்காங்கே கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(படங்கள்:- ரவிசாந், சபேசன், சிவசாந்தன், ஜோசப்நயன், தேவானந்தன், வசந்தரூபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரடங்கு வேளையில் மேல் மாகாணத்தில் 664 பேர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் மாலை தொடக்கம் நேற்று அதிகாலை வரையில் மேல் மாகாணத்தில் 664 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் விதி மீறலில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5)

## சமூக ஊடகங்களை முடக்குவதை மீள்பரிசீலனை செய்யுங்கள்

### அமைச்சர் நாமல் வலியுறுத்து

(கொழும்பு)

சமூக ஊடகங்களை முடக்கும் முடிவை அதிகாரிகள் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும் "சமூக ஊடகங்களை முடக்குவதை நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்றதோடு வி.பி.என் செயலி இவ்வாறான தடைகளை தற்போது முற்றாக அர்த்தமற்றதாக்கிவிடுகின்றது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை "அதிகாரிகள் முற்போக்கான விதத்தில் சிந்திக்கவேண்டும், என்பதோடு முடக்கும் முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும்" எனவும் தெரிவித்துள்ளார். (நி-5)

## மருத்துவ பொருட்களுக்காக நிதியமைச்சினால் 20 மில்லியன் டொலர் வழங்கப்பட்டது

(கொழும்பு)

தட்டுப்பாடு நிலவும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றுக்காக நிதியமைச்சினால் சுகாதார அமைச்சுக்கு 20 மில்லியன் டொலர் வழங்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 3 மாதங்களுக்கு மருந்து விநியோகத்தை முகாமைத்துவம் செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கான மருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்கு 22 மில்லியன் டொலர் தேவையாக இருந்ததாகவும் சுகாதார அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-5)

## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

### பெறுகை அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கான பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை(ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | பிணைப்பணம்/ காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1. | KN/EB/DO4/ IMP/KQ/1104-2 | கண்டாவளை பிரதேச செயலாளர் விடுதிக்குரிய மேம்படுத்தல் வேலைகள் | 2.21 மில்லியன் | C8 and C7 Building | ரூபா 23000/= 25.07.2022 வரை | 2000/= |
| 2. | KN/EB/DO4/ IMP/PQ/1104-3 | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் விடுதிக்குரிய மேம்படுத்தல் வேலைகள் | 2.69 மில்லியன் | C8 and C7 Building | ரூபா 27000/= 25.07.2022 வரை | 2000/= |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   - I. நிர்மாணப்பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (ii) இலக்க 08.05.2019 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு 5% முன்னுரிமையளிக்கப்படும்.
   - IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663, பக்ஸ் இல:- 0212283966)
3. கேள்வி ஆவணங்களை 05.04.2022 ஆம் திகதியிலிருந்து 26.04.2022 ஆம் திகதி வரை முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப்பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 18.04.2022 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/........................." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மவாட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 27.04.2022 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

திருமதி.றூ.கேதீஸ்வரன்,
திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர்/மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்

(C-4112)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### அல்ஹாஜ் எம்.எப்.எம் இக்பால் (ஜே.பி)



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கௌரவ பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் நடைபெற்ற கலாபூஷணம் அரச விருது விழாவில் எழுத்தாளர் அல்ஹாஜ் எம்.எப்.எம் இக்பால் (ஜே.பி) அவர்கள் கலாபூஷணம் அரச விருது பெற்றார். கலாபூஷணம் யாழ். இக்பால் அவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.

மேலும் தொடர்ந்தும் எழுத்துத்துறையில் தடம் பதிக்க ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ்க

(0883) வாழ்த்துவோர்

Jaffna Muslim Society Media


## கருத்துக்களை எதிர்கொள்ள அஞ்சுபவர் தலைமை வகிக்கத் தகுதியற்றவர்

### சஜித் டுவிட்



(கொழும்பு)

சமூக ஊடகங்களை தடை செய்வதன் மூலம் அரசாங்கத்தின் மீதும் கோபம் மற்றும் வெறுப்பு அலைகளை தடுக்க முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கருத்துச் சுதந்திரம் உங்களுக்கு அச்சுறுத்தல் என நீங்கள் கருதினால் நீங்கள் தலைமை தாங்க தகுதியற்றவர் எனவும் நேற்றுக் காலை தனது டுவிட்டரில் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் சமூக ஊடகங்கள் மூலம் நாடு முழுவதும் அரசுக்கு எதிரான மாபெரும் போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒருங்கிணைக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் போராட்டத்தை ஒடுக்கும் வகையில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டு, ஊடரங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சமூக ஊடகங்களும் நேற்று முன்தினம் இரவு முதல் முடக்கப்பட்டுள்ள நிலையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம்

# மனிதம் மரணிக்கவில்லை...



துபாயில் பணியாற்றி வந்த எனது நண்பர், விடுமுறைக்காக சொந்த ஊரான திருவாரூர் வந்திருந்தார். திருவாரூரில் அந்த ஹோட்டல் ரொம்ப பிரபல்யம். அண்மையில் அந்த ஹோட்டலுக்கு டின்னருக்காகச் சென்றார். சாப்பிட தனக்கான உணவை ஓர்டர் செய்து விட்டு காத்திருந்தார்.

அப்போது ஜன்னல் ஓரம் இரு கண்கள், ஹோட்டல் அறைக்குள் எட்டி பார்த்தன. சாப்பாடு மேசைகளில் நிறைந்திருந்த உணவு பதார்த்தங்களையும் ஏக்கத்துடன் பார்த்தன. அதனை பார்த்த நண்பர், அந்த சிறுவனை உள்ளே வருமாறு சைகை செய்தார்.

அந்தச் சிறுவன் உள்ளே வந்தான். அவனுடைய குட்டித் தங்கையும் கூட இருந்தாள். சிறுவனிடம் என்ன வேண்டுமென்று நண்பன் கௌசிக் கேட்க, அவரது தட்டையே காட்டி கேட்டான் அந்த சிறுவன். உடனே அது போல மேலும் இரு பிளேட் உணவை கௌசிக் ஓர்டர் செய்தார். உணவை பார்த்ததும் அந்தச் சிறுவன் அவசரம் அவசரமாக சாப்பாட்டில் கை வைக்கத் தொடங்கினான்.

அப்போது அந்தச் சிறுவனின் கையை மற்றொரு பிஞ்சுக்கை தடுத்தது. தடுத்தது அவனது தங்கை. தனது தங்கை ஏன் தன்னைத் தடுக்கிறாள் என்பதை புரிந்து கொண்டான் அந்தச் சிறுவன். பின்னர் இருவரும் கைகழுவி விட்டு வந்துள்ளனர். தொடர்ந்து மிகவும் அமைதியாக அமர்ந்து உணவை ருசித்து சாப்பிட்டுள்ளனர்.

அப்போது இருவரும் எந்த ஒரு வார்த்தையும் பேசிக் கொள்ளவில்லை. சாப்பிட்டு முடிந்ததும், அந்தச் சிறுவன் கௌசிக்கை பார்த்து கனிவுடன் சிரித்துள்ளான். பின்னர் எதுவும் சொல்லிக் கொள்ளவில்லை. அண்ணனும் தங்கையும் அமைதியாக ஹோட்டலை விட்டு வெளியேறியுள்ளனர்.

அதுவரை கௌசிக் அந்த சிறார்கள் சாப்பிடும் அழகை பார்த்துக் கொண்டு, தனது உணவில் கையை வைக்கவில்லை.

பின்னர் அவரும் சாப்பிட்டு முடித்து விட்டு, பில் கேட்டுள்ளார். ஹோட்டல் ஓனர் பில்லுக்கு பதிலாக ஒரு கவரை கொடுத்து அனுப்பினார். அதனை பார்த்ததும் எனது நண்பரின் கண்கள் கலங்கியது. பில்லில் தொகை எதுவும் எழுதப்படவில்லை.

அதில் எழுதப்பட்டிருந்த வாக்கியம் இதுதான்...

"மனிதாபிமானத்துக்கு பில்போட எங்களிடம் இயந்திரம் இல்லை. உங்களுக்கு நல்லது நடக்கட்டும்."

# மருந்துகளின் விலை இந்தியாவில் அதிகரிப்பு

(டில்லி)

இந்தியா முழுவதும் அத்தியாவசிய மருந்து பொருட்களின் விலை 10.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இது குறித்த அறிவித்தலை இந்திய தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையம் வெளியிட்டிருந்தது.

வலி நிவாரணிகள், நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள், தொற்று நோய் எதிர்ப்பு மருந்துகள் உள்ளிட்ட 800க்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகளின் விலை உயர்ந்துள்ளது.

இதேவேளை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படும் சில மருந்துகளுக்கான விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# மாணவர்கள் சுற்றுலா சென்ற பேருந்து நடுரோட்டில் தீ பிடித்து எரிந்தது

## கேரளாவில் பரபரப்பு



(டில்லி)

கேரளாவில் இருந்து கோவாவுக்கு கல்லூரி மாணவர்கள் சுற்றுலா சென்ற பேருந்து நடுரோட்டில் தீ பிடித்து எரிந்த சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கேரள மாநிலம் கண்ணூர் மாதமங்கலம் பகுதியில் உள்ள ஒரு தனியார் கல்லூரி மாணவர்கள் கோவா மாநிலத்திற்கு பேருந்தில் சுற்றுலா சென்றனர்.

அப்போது பேருந்தின் முன்பகுதியில் இருந்து புகை வந்தது. உடனே சாரதி பேருந்தை வீதியோரம் நிறுத்தினார். அதற்குள் பேருந்து தீப்பிடித்து எரிந்தது.

காற்று பலமாக வீசியதால் பேருந்து முழுவதும் தீ மளமளவென பரவியது. உடனே பேருந்தில் இருந்த மாணவர்கள் அனைவரும் கீழே இறங்கி பாதுகாப்பான இடத்திற்கு சென்று விட்டனர். அதிர்ஷ்டவசமாக யாருக்கும் பாதிப்பு ஏற்பட வில்லை.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. (நி-5)

# இம்...

## நம்பிக்...

(இஸ்ல...

பாகிஸ்...

கொண்டு...

பாராளும...

தீர்மானம்...

காசிம் கா...

பரபரப்பான சூ...
பாகிஸ்தான் பா...
கூடியது. இம்ரான்க...
த்திற்கு அழைப்பு ...
ததால் பாராளுமன்...
பலத்த பாதுகாப்பு...
இருந்தது. பாராளு...
மணிநேரம் கூடியது...
பிரதமர் இம்ரான் கா...
றத்திற்கு சமூகமளிக்...

பாராளுமன்றம்...
நம்பிக்கையில்லா ...
வாக்கெடுப்பு நடை...
எதிர்பார்க்கப்பட்ட நி...
திருப்பமாக நம்பி...
தீர்மானம் அரசியல்...
எதிரானது எனக்கூ...
யில்லா தீர்மானத்...
காசிம் கான் நிராகரி...
பாகிஸ்தான் பாராளு...
25 ஆம் திகதி வ...
கப்படுவதாகவும் அ...
இதனால் நம்பிக்கை...
மானம் மீது வாக்...
முடியாத நிலை ஏற்...

இந்நிலையில் ...
பாராளுமன்றத்தை ...
இம்ரான் கான் அந்...
தியிடம் கோரிக்கை ...
நம்பிக்கையில்லா ...
நிராகரிக்கும் முடி...

# கீவ் நகர வீதிகளில் சிதறிக் கிடக்கும் உடல்கள்

(கீவ்)

கீவ் அருகில் உள்ள புச்சா நகரில் கொல்லப்பட்ட உடல்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்த நிலையில், ஒரே இடத்தில் சுமார் 300 உடல்கள் புதை க்கப்பட்டுள்ளன.

உக்ரைன் தலைநகர் கீவ் அருகே இர் பின், புச்சா ஆகிய பகுதிகளில் இருந்து ரஷ்ய படைகள் வெளியேறியதையடுத்து அங்கு உக்ரைன் வீரர்கள் மற்றும் மக்கள் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ம்ரான்கானுக்கு எதிரான

## பிக்கையில்லா பிரேரணை நிராகரிப்பு

**(ஸ்லாமாபாத்)**

**கிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது நேற்று ளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெறவிருந்த நிலையில் இந்தத் ானம் அரசியல் சாசனத்திற்கு எதிரானது எனக்கூறி சபாநாயகர் ம் கான் அதனை நிராகரித்துள்ளார்.**

ான சூழலில் நேற்று ர் பாராளுமன்றம் ம்ரான்கான் போராட்ட ழைப்பு விடுத்து இருந் ளுமன்றத்தை சுற்றி துகாப்பு போடப்பட்டு பாராளுமன்றம் ஒரு கூடியது. பாகிஸ்தான் ான் கான் பாராளுமன் கமளிக்கவில்லை.

மன்றம் கூடியதும் ில்லா தீர்மானம் மீது பு நடைபெறும் என பட்ட நிலையில், திடீர் நம்பிக்கையில்லா அரசியல் சாசனத்திற்கு எனக்கூறி நம்பிக்கை ானத்தை சபாநாயகர் நிராகரித்தார். மேலும், பாராளுமன்றம் ஏப்ரல் கதி வரை ஒத்திவைக் வும் அவர் அறிவித்தார். ம்பிக்கையில்லாத் தீர் வாக்கெடுப்பு நடத்த லை ஏற்பட்டது.

லயில் பாகிஸ்தான் றத்தை கலைக்குமாறு ன் அந்நாட்டு ஜனாதிப ரிக்கை விடுத்துள்ளார். ில்லா தீர்மானத்தை ம் முடிவு சரியானதே



என்று கூறியுள்ள இம்ரான் கான், பாராளுமன்றத்தை கலைத்து விட்டு தேர்தல் நடத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தோல்வி நிச்சயம் என்ற சூழலிலேயே பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்குச் செல்லும் முடிவை இம்ரான்கான் எடுத்துள்ளதாக தெரியவருகிறது. பாகிஸ்தானில் பணவீக்கம் அதிகரிப்பு, விலைவாசி உயர்வு ஆகியவற்றுக்கு பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசு தான் காரணம் எனக் குற்றம் சாட்டி அவர் மீது எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவந்தன.

பாகிஸ்தானில் உள்ள 342 எம்.பிக்களில் 172 பேரின் ஆதரவை பெற்றால் தான் பதவியில் நீடிக்க முடியும் என்ற நிலை இம்ரான் கானுக்கு உள்ளது.

ஆனால், இம்ரான் கானுக்கு அந்த அளவு ஆதரவு இல்லை. எதிர்க்கட்சிகளுக்கு 177 எம்.பிக்கள் ஆதரவு உள்ளது. இதனால், இம்ரான் கான் ஆட்சி கவி ழும் என்றே எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ,பாராளுமன்றை கலைக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

## வட்ட வடிவ மீன்தொட்டிக்கு பெல்ஜியத்தில் தடை

(பிரஸ்ஸல்ஸ்)

பெல்ஜியம் அரசாங்கம் வட்டமான மீன் தொட்டிகளை விற்பனை செய்வதை தடை செய்ய திட்டமிட்டுள்ளது.

வட்டமான மீன் தொட்டிகளில் வளர்க்கப்படும் மீன்கள் அதிக அழுத்தத்திற்கு உள்ளாவதாக கூறி பெல்ஜியம் அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

இது குறித்து அந் நாட்டு விலங்குகள் நல அமைச்சர் பெர்னார்ட் கிளெர்பயட் கூறுகையில்,

"வட்ட வடிவிலான மீன் தொட்டிகள் மீன்களுக்கு அதிக அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. வட்டமான தொட்டிகள் பெரும்பாலும் சதுர அல்லது செவ்வக வடிவ மீன் தொட்டிகளைக் காட்டிலும் சிறிய நீர் மேற்பரப்பைக் கொண்டுள்ளன, இது தண்ணீரில் உறிஞ்சப்படும் ஒட்சிசனின் அளவை பாதிக்கிறது.

மேலும் இந்த வடிவிலான தொட்டிகள் மீனின் ஆரோக்கியம் மற்றும் வாழ்வை கடுமையாக பாதிக்கிறது என அவர் தெரிவித்தார். (நி)

## ஒமிக்ரோனை விட வேகம் கூடிய XE திரிபு பிரிட்டனில் கண்டறிவு

(லண்டன்)

ஒமிக்ரோனை விட வேகமாகப் பரவக் கூடிய புதிய வகை கொரோனா உருத்திரிவு வைரஸ் பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தகவல் தெரிவித்துள்ளது.

ஒமிக்ரோன் திரிபுகளான பிஏ.1 மற்றும் பிஏ.2 ஆகியவற்றின் பிறழ்வுதான் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள எக்ஸ்இ (variant XE) வகை கொரோனாவாகும்.

ஒரே நேரத்தில் குறிப்பிட்ட நபர் பல்வேறு கொரோனா திரிபுகளால் பாதிக்கப்படும் போது புதிய வகை உருவாகிறது. திரிபுகள் சேர்க்கையின்போது மரபியல் சார்ந்த கூறுகள் கலந்து புதிய வகை கொரோனா உருவாவதாக பிரிட்டன் நிபுணர்கள் தங்களின் ஆய்வு கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளனர்.

ஒமிக்ரோன் வகையின் துணை திரிபான பிஏ.2-ஐ விட புதிதாக உருவாகியுள்ள எக்ஸ்இ கொரோனா திரிபு 10 விகிதம் அதிவேகமாக பரவலாம் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இருப்பினும், இது குறித்து மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி 19ஆம் திகதி எக்ஸ்இ வகை கொரோனா முதன்முதலாக கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

ல்

ள்



அப்போது தெருக்களில் பலரது உடல்கள் சிதறி கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். புச்சாவில் ஒரு தெருவில் மட்டும் 20 ஆண்களின் உடல்கள் கிடந்தன. அவர்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் பிணமாக கிடந்தனர்.

இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று புச்சா மேயர் அனடோலி பெடோருக் தெரிவித்தார். மேலும் அவர் அதிர்ச்சி தகவல் ஒன்றையும் தெரிவித்தார்.

வீதிகளில் உடல்கள் சிதறிக் கிடந்ததால் ஒரே இடத்தில் பெரிய பள்ளம் தோண்டி உடல்களை புதைத்தோம் என நகர மக்கள் தெரிவித்தனர். (நி-5)

## கண்ணிவெடிகளை புதைத்து விட்டு 'கீவ்' இல் இருந்து வெளியேறிய ரஷ்யபடைகள்

## மக்கள் பீதி

(கீவ்)

உக்ரைன் தலைநகர் கீவ்வில் இருந்து ரஷ்ய படைகள் வெளியேறிய நிலையில், கண்ணி வெடிகள் புதைத்து வைத்திருக்கலாம் என மக்கள் பீதியடைந்துள்ளனர்.உக்ரைன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி போரை தொடங்கியது. ஒரு மாதத்துக்கு மேல் ரஷ்ய படைகளின் தாக்குதல் நீடித்து வரும் நிலையில் உக்ரைனின் முக்கிய நகரங்களை கைப்பற்றவில்லை.

குறிப்பாக தலைநகர் கீவ், கார்கிவ் ஆகிய நகரங்களை கைப்பற்ற ரஷ்ய இராணுவம் கடுமையாக தாக்குதல்களை நடத்தியது. அந்த நகரங்கள் மீது ஏவுகணை வீச்சு மற்றும் வான்வழி தாக்கு தல்கள் தொடர்ந்து தொடுக்கப்பட்டன.

மேலும் கீவ் நகரை நோக்கி 64 கிலோ மீற்றர் தூரத்துக்கு ரஷ்ய இராணுவ படை அணிவகுத்து வந்தது. இதனால் கீவ் நகரத்தில் ரஷ்ய படைகள் நுழையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ரஷ்ய [illegible] உக்ரைன் வீரர்கள் [illegible]டும் சவால் அளித்தனர்.

கீவ் புறநகர் பகுதிகளை தங்கள் கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்த ரஷ்யாவால் தலைநகருக்குள் நுழைய முடியவில்லை. ரஷ்ய படைகளை உக்ரைன் இராணுவத்தினர் தொடர்ந்து பின் வாங்க செய்தனர். மேலும் கீவ் புறநகரில் சில பகுதிகளை உக்ரைன் இராணுவம் மீட்டது.

இதற்கிடயே கீவ் மற்றும் செர்னிஹிவ் நகரங்களை சுற்றி இருக்கும் தனது படைகளை குறைப்பதாக ரஷ்யா அறிவித்தது.

உக்ரைன் தலை நகருக்கு அருகே உள்ள முக் கிய நகரங்களில் இருந்து ரஷ்ய படை பின்வாங்கின. அங்கிருந்து ரஷ்ய வீரர்கள் வெளியேறினார்கள்.

கீவ்வை சுற்றியுள்ள நகர்ப்பகுதியில் இருந்து ரஷ்ய படைகள் வெளியேறியதையடுத்து அப்பகுதிகளை உக்ரைன் இராணுவத்தினர் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் ரஷ்ய படைகள் வெளியேறிதால் கீவ் நகரப் பகுதிகளில் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு ஆண்டகையின் நினைவு பேருரை மன்னாரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. (படம்:-ஜோசப்நயன்)

# ஹயஸ்-மோ.சைக்கிள் விபத்து ஒருவர் மருத்துவமனையில்



(குருமன்காடு)

வவுனியா, மன்னார் வீதியில் பட்டானிச்சூர் பகுதியில் நேற்று முன்தினம் ஹயஸ் ரக வாகனம் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள் ளானதில் ஒருவர் படுகாய மடைந்த நிலையில் மருத்து வமனையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத் துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-250)

# மின்வெட்டை சாதகமாக்கி சட்டவிரோத மணல் அகழ்வு

## புதுக்குடியிருப்பில் அதிகரிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத மணலகழ்வு இடம்பெற்று வருகின்ற நிலையில் இரவு நேரங்களில் அதிகளவான சட்டவிரோத மணலகழ்வு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் குறிப்பாக புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் நான்கு சந்திகளிலும் இராணுவ சோதனை சாவடிகளும் உள்ளபோதும் நகர்ப்பகுதி ஊடாக உழவு இயந்திரத்தில் மணல் கொண்டு செல்லப்படுகிறது. இருப்பினும் இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (4-281)

# கடல் அட்டைகள் பறிமுதல்

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் மீன்பிடி துறை முகத்தில் சட்டவிரோதமாக மறைத்து வைத்திருந்த 300 கிலோ கடல் அட்டைகளை மெரைன் பொலிஸார் நேற்றுக் காலை பறிமுதல் செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் தொடர்புடைய மூவரை கைது செய்து தனுஷ்கோடி மெரைன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரித்து வருகின்றனர்.



இந்தத் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகள் தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கடத்த பதுக்கி வைத்திருந்ததா? என்ற கோணத்தில் தொடர்ந்து மெரைன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-285)

# டிப்பர் சாரதிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகித்ததால் குழப்பநிலை



(கண்டாளை)

கிளிநொச்சி நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று டிப்பர் வாகன சாரதிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கியதால் அமைதியின்மை ஏற்பட்டது.

விவசாயிகள் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கான எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. நேற்று நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்ட நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பங்கீட்டு அட்டைக்கான மண்ணெண்ணெயை வழங்காது நூற்றுக்கும் மேற்பட்ட டிப்பர் வாகன சாரதிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் அங்கு நின்ற பொதுமக்களால் அமைதியின்மை ஏற்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (4-5-315)

# கிளிநொச்சி சிறுபோக செய்கைக்காக மொனராகலையிலிருந்து உரம்

(கண்டாளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான சேதன உரம் மொனராகலை மாவட்டத்திலிருந்து எடுத்துவரப்படவுள்ளதாக மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 25 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நிலப்பண்படுத்தலுக்கு தேவையான எரிபொருள் பெற்றுக்கொள்வதில் காலதாமத நிலை காணப்படுகிறது.

இதனால் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலையில் சேதன உரத்தைப் பயன்படுத்தி பயிர் செய்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டதையடுத்து மொனராகலை மாவட்டத்திலிருந்து 600 பாரஊர்திகளில் சேதன உரம் எடுத்து வரப்பட உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேதன உரத்தை ஏற்றி வரும் 600 லொறிகளுக்கும் தலா 250 லீற்றர் டீசல் வீதம் எரிபொருள் வழங்க வேண்டிய தேவை இருப்பதாகவும் மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-315)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா: 42 சூரி 8 செவ் 11 இல்
உயரம் :5' 7"
தகைமை/தொழில்:BSc, MBA Reading/ தனியார் தொழில் இந்தியா
எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகள் இந்தியாவில் இருக்க வேண்டும் வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொ.இ: B/12486

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 29 சூரி 11 செவ் 1 இல் உயரம்: 171 cm
தகைமை/தொழில்:A/L கனடா PR உண்டு
எதிர்பார்ப்பு: உள்நாடும் வெளிநாடும்
தொ.இ:B/12487

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம் : திருவோணம் 2
கி.பா: 50 ¼ சூரி 6 செவ் 2
உயரம்: 5' 11"
தகைமை/தொழில்அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி உள்நாடு மட்டும்
தொ.இ: B/12488

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்:ரோகிணி 3
கி.பா: சூரி 8 செவ் 6 இல் உயரம்:6'
தகைமை/தொழில்:Bachelor of Information Technology லண்டன்
எதிர்பார்ப்பு:பட்டதாரி விரும்பத்தக்கது
ஆங்கில அறிவு வேண்டும்
தொ.இ: B/12490

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா: 100 சூரி 5 செவ் 1
உயரம்: 165 cm
தகைமை/தொழில்:BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ:G/12521

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 60 சூரி 5 செவ் 6 இல்
தகைமை/தொழில்:BAபட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு தகுந்த அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ:G/12522

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 37 சூரி , செவ் 4 இல்
உயரம்: 163 cm
தகைமை/தொழில்:MSC ICT பட்டதாரி ஆசிரியை
எதிர்பார்ப்பு : தகுந்த தனியார் உத்தியோகம்
தொ.இ:G/12523

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:-கார்த்திகை 3
கி.பா: 14 ½
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்:Graughtpharmacist அவுஸ்ரேலியா சிற்றிசன்
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ:G/12528

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிக்குள் நாடு

## கடன் செலுத்த தயாராகும் அரசு

### பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது மக்கள் பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ள நிலையில், அரசாங்கம் 7 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை திருப்பி செலுத்த தயாராகி வருவதாக பாரா்ளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் இந்த செயற்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும் என ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்ட போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இந்த அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வை வழங்க முடியாத் காரணத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள விரக்தியே இன்று வன்முறையாக மாறியுள்ளது.

அரசாங்கத்தின் மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் மக்கள் நம்பும் அரசாங்கத்தை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட



வேண்டும்.

ஆனால் கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டை தேர்தலுக்குத் தள்ள முடியாது என்பதால், நாட்டை குழியில் இருந்து மீட்க இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும்.

கடந்த இரண்டு வருடங்களில் செய்ய வேண்டியதைச் செய்யாததன் விளைவுகளைத் தான் இப்போது அனுபவிக்கிறோம். இருப்பினும் அரசாங்கம் இன்னும் செய்ய வேண்டியதைச் செய்யவில்லை. உதாரணமாக இன்று மக்களுக்கு மின்சாரம் இல்லை, எரிபொருளில்லை, மருந்து இல்லை.

ஆனால் கடந்த ஏழு நாட்களாக கடனை செலுத்திய அரசாங்கம் நாங்கள் என்று அரசாங்கம் மிகவும் பெருமையுடன் கூறுகின்றது.

மக்களின் அடிப்படைத் தேவைகளை இலங்கை அரசாங்கம் வழங்கத் தவறியமை நாட்டுக்குப் பாரிய ஆபத்தை ஏற்படுத்தியிருப்பதை இன்று முழு உலகமும் அறியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# அமைதியான முறையில் போராட்டம் நடத்த அனுமதிக்க வேண்டும்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

மக்கள் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டுமென ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் வன்முறைகளில் ஈடுபடக் கூடாது எனவும், பொதுச் சொத்துக்களுக்கு தீங்கு விளைவிக்க கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அண்மையில் ஜனாதிபதியின் இல்லத்திற்கு அருகாமையில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# இலங்கை செல்லும் பிரஜைகளுக்கு பிரிட்டன் அரசு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் தமது நாட்டு பிரஜைகளுக்கு பிரிட்டன் சில முக்கிய ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

இதன்படி இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு செலுத்துவதற்கு கடினமான நாணயத் தட்டுப்பாடு காரணமாக, மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளின் பற்றாக் குறையுடன் இலங்கையில் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருகின்றது.

இதனால் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் பிரிட்டன் பிரஜைகள் அவதானத்துடன் செயற்படுமாறு ஆலோசனைகளை வழங்கியுள்ளது. ( நி-5)

# உச்சம் தொட்டது வெற்று சிலிண்டரின் விலை

(கொழும்பு)

லிட்ரோ வெற்று எரிவாயு சிலிண்டரின் விலை 21,000 ரூபாவாக அதிகரித்துள்ளது.

வெற்று எரிவாயு சிலிண்டர்களை விற்கும் விளம்பர இணையத்தளங்கள் இது தொடர்பில் விளம்பரங்களை வெளியிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## யார் கொடுப்பது?

ஹோட்டலுக்குப் போகிறோம், சினிமாவுக்குப் போகிறோம். ஒரு பொருளை வாங்குகிறோம். பஸ் டிக்கெட்டோ ரயில் டிக்கெட்டோ வாங்குகிறோம். இத்தகைய சூழ்நிலையில், நண்பர்களுடனோ, உறவினர்களுடனோ அப்பொழுதுதான் அறிமுகமானவர்களுடனோ இருக்கும் போது மேற்கூறிய விஷயங்களுக்கு யார் பணம் கொடுப்பது என்கிற கேள்வி எழாமல் போகாது.

பார்க்கச் சாதாரணமாகத் தோன்றினாலும் இதுவே பெரும் பிரச்சினையாக ஆகிவிடுவதுண்டு. குத்திக்காட்டிப் பேசும் படியும் பெரும் பகை வளரும்படியும் சூழ்நிலைகள் உருவாகி விடக்கூடும். பெரும் நெருப்புக்குச் சிறு தீப்பொறி போதுமே!

நம்முடைய - பிறருடைய பொருளாதாரத் தரங்கள், இடம், சூழ்நிலை, அது யாருடைய முயற்சி என்பனவற்றை அடிப்படையாக வைத்தே யார் கொடுப்பது என்பதில் தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

ஆண் பெண் இருவருக்குள் இந்தப் பிரச்சினை எழுந்தால் ஆண்கள் தாம் கொடுக்க வேண்டும்.

வசதியில் உயர்ந்திருந்தாலும் நம்மைவிடச் சிறியவர்களைப் பொறுத்தவரையில் நமக்காகச் செலவழிக்கச் சொல்வது முறையாகாது.

எனவே, இந்தக் கேள்வி எழுந்தால் வயதில் முதியவர்களே கொடுக்க வேண்டும்.

அப்போது தான் அறிமுகமாகியவர்கள் என்றால் முடிந்த வரை அவர்களைக் கொடுக்க அனுமதிக்கக் கூடாது. அப்போது தான் நம்மைப் பற்றிய உயர்வான எண்ணத்தை அவர்களிடத்தில் ஏற்படுத்த முடியும்.

அன்பாலும் பாசத்தாலும் மற்றவர்களால் ஈர்க்கப்பட்டு, அவர்கள் கொடுக்கவே கூடாது என நீங்கள் உறுதியாக விரும்பினால் இறுதிவரை விடாதீர்கள்.

அதை விட்டுவிட்டு, பெயருக்கு நான் கொடுக்கிறேன் என்பது, அரைகுறை மனத்துடன் இயங்குவது, போலியாகப் பர்ஸை வெளியே எடுப்பது போன்ற பாவ்லா வேலைகளைச் செய்வது சும்மா இருந்துவிடுவதை விடத் தவறான நினைப்புகளையே மற்றவர் மனத்தில் உண்டாக்கும்.

உண்மையாகவே அவர் கொடுக்கக்கூடாது என நீங்கள் விரும்பும் பட்சத்தில், அவரை நீங்கள் நன்கு அறிந்தவர் என்னும் நிலையில் கொடுத்துக் கொடுத்து ஓயட்டும் எனக் காத்திருங்கள். அவர் சலித்துப் போனதும் ஈடுகட்டும்படியாகக் கொடுங்கள்.

அதேபோல், நியாயமற்ற முறையில் மற்றவர்கள் நமக் காகச் செலவழித்துவிட நேர்ந்தால், அந்த நேரத்தில் சும்மா இருந்துவிட்டு அதற்கு இணையான ஒரு செலவை வேறு வகையில் அவர்களுக்கெச் செய்துவிடுங்கள். பொருளாகவும் வாங்கிக் கொடுக்கலாம்.

ஒருவரையொருவர் நன்கு புரிந்து வைத்துக் கொண்டிருக்கும் பட்சத்தில் ஒருமுறை நான் - மறுமுறை நீ என்று வாய் ஒப்பந்தம் செய்துகொள்ளுங்கள்.

ஒருவருக்காகச் செலவழிக்கிறீர்கள் என்றால் அவருக்கும் திருப்பிச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதா? அல்லது நன்றியுணர்வாவது அவரிடம் மிஞ்சி நிற்கிறதா? அல்லது தன்னால் செலவழிக்க இயலவில்லையே என்ற அடிப்படை உணர்வாவது அவரிடம் இருக்கிறதா என்றெல்லாம் அறிவு பூர்வமாக உணர முற்படுங்கள்.

இந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் இல்லை என்பதுதான் என்றால் அவர் உங்களை மொட்டையடிக்கப் பார்க்கிறார் என்று பொருள். அவருடன் பேச்சோடு வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, எப்போதும், இப்படிப்பட்ட செலவுகளில் மற்றவர்களை விட ஒருபடி உயர்ந்து நிற்க முற்படுங்கள்.

அப்படிச் செய்வீர்களானால் மற்றவர்களின் உள்ளத்தில் உங்களைப் பற்றிய எண்ணமும் உயர்ந்து நிற்கும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## இயல்பு மாறுமா!





(நேற்றைய தொடர்ச்சி)

எல்லோரும் உழைத்துப்பிழைப்பவர்கள். எனவே இந்தப் பொன்னம்பலத்தின் பணம் தேவைஇல்லை.

அவன் தன் பணத்தைக் கொடுப்பதானால் அரசாங்கத்திற்குக் கொடுக்கட்டும். அரசாங்கம் மக்களுக்குச் செலவிடும் என்றான். பொன்னம்பலம் வில்வநாதனைப் பற்றித் தெரிந்து கொண்டு அவனிடம் தன் பணத்தைக் கொடுக்கலானான்.

ஆனால் வில்வநாதனோ "இதை நான் வாங்க மாட்டேன். இது எந்த வகையில் சம்பாதிக்கப்பட்டதோ எனக்குத் தெரியாது. நான் எதையும் யாரிடமிருந்தும் தானமாகப் பெற்றுக் கொள்ள மாட்டேன்" என மறுத்து விட்டான்.

வேதாளம் இக் கதையைக் கூறி மன்னர் வில்வநாதன் கோவில், பள்ளி எனக் கூறித் தனக்குப் பணம் சேர்த்துக் கொண்டான். ஆனால் பொன்னம்பலம் நிறையப் பணம் கொடுக்க வந்தபோது அதை ஏற்க மறுத் தான்? திடீரென சுய நலம் அவனை விட்டுப் போய் நல்ல புத்தி அவனுக்கு வந்து விட்டதா? இக் கேள்விகளுக்கு பதில் தெரிந்தும் நீ கூறாவிட்டால் உன் தலை வெடித்து சுக்கு நூறாகிவிடும் என்றது.

விக்கிரமனும் "வில்வநாதன் பொன்னம்பலத்தின் பணம் வேண்டாம் என்று கூறியதால் அவனுக்கு நற்புத்தி வந்துவிட்டதாகக் கொள்ள முடியாது.

அவன் தனக்கு ஆதாயம் இல்லாமல் எந்த வேலையையும் செய்ததில்லை. அவன் பிறரை நற்காரியங்கள் செய்ய விடாமல் தடுத்து வந்தான். பொனம்பலத்தின் பணத்தால் தனக்கு எந்த இலாபமும் இல்லை என்று கண்டு அதை ஏற்க மறுத்து அப்பணத்தால் அவன் நற்செயல்கள் செய்துவிடக் கூடாது என்ற நோக்கத்திலே பணத்தை அரசாங்கத்திற்குக் கொடுக்கும்படி கூறினான். எனவே அவனது இயல்பு மாறவில்லை" என்றான்.

விக்கிரமனின் சரியான இந்த பதிலால் அவனது மௌனம் கலையவே அவன் சுமந்து வந்த உடலோடு வேதாளம் உயரக் கிளம்பிப் போய் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




"அண்ணன் இருக்கத் தம்பி ஆட்சியை ஏற்பதில் நியாயம் இல்லை" என்றான் பரதன்.

"தெய்வம் அவனை வேறு வழியில் திருப்பி விட்டது: அறம் தழைக்க நீ ஆற்ற வேண்டிய கடமைகள் உள்ளன; இங்கு இருப்பது நீயும் உன் தம்பியும்தான்; சூரிய குலத்துக்குச் சுடர் விளக்காக இருக்கும் நீங்கள், பொறுப்பேற்று நானிலத்தை வழி நடத்த வேண்டும்; நல்லதோ கெட்டதோ அரசன் வாய்மொழி! அதற்கு நீ கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும்; நீ மன்னனாய்ப் பொறுப்பு ஏற்க வேண்டும்; மணி முடி சூட வேண்டும்" என்பது தசரதன் கட்டளை, 'நீ அதனைச் செயற்படுத்த வேண்டும் என்பது, நாங்கள் பூட்டும் தளை' என்று தெரிவித்தனர். "உங்கள் ஆர்வத்தை மதிக்கிறேன்; ஆனால், அவசரத்தை எதிர்க்கிறேன்; இராமன் மணி முடி தரிப்பதில் உங்களுக்குத் தடை இராது என்று நினைக்கிறேன்" என்றான்.

கிணறு வெட்டப் புதையல் கிடைத்தது போல இருந்தது; புதுமையாய் இருந்தது; உள்ளப் பூரிப்பைத் தூண்டியது; [illegible] சிறிது நேரம் [illegible] விட்டது அவன் சொற்களை ஆர்வத்தோடு எதிர்பார்த்தனர். "நான் இராமனை அழைத்து வர ஏகுகிறேன்; அவன் வராவிட்டால் தவசியர் நால்வர் ஆவோம் என்பது உறுதி; சடை முடியைத் தரித்துச் சந்நியாசியராய் அங்கு அவனோடு காலம் கடத்துவோம்; அதற்கும் அனுமதி இல்லை என்[illegible] சென்று விடும்" என்றான். அவன் திண்மையைக் கண்டு நாட்டோர் திகைத்தனர்; உறுதியாய் நன்மை விளையும் என்று நம்பினர்.

"தனி ஒருவனால் இதைச் சாதிக்க முடியாது; இராமன் திரும்பி வரும்போது அரச மரியாதையோடு தான் வர வேண்டும்; அவனைப் பேரரசனாய்ப் பார்க்க வேண்டும்; நால்வகைப் படையும் அவனைத் தொடர்ந்து வர வேண்டும்" என்றான்.

நகரமாந்தரும் நல்லோர் அனைவரும் உடன் செல்லப் புறப்பட்டனர்; சுற்றத்த வரும் உடன் செல்லப் புறப்பட்டனர்; அன்னையரும் அங்கிருந்து அடையும் பயன் இல்லை ஆதலின், அவர்களும் உடன் செல்ல எழுந்தனர்; கைகேயியும் எதிர் நீச்சல் அடிக்க முடியாமல் வெள்ளத்தில் ஒருத்தியாய்க் கலந்து கொண்டாள்; அவள் எடுத்த முடிவு தோற்றுவிட்டது; குதிரையைக் குளத்திற்குக் கொண்டு போனாள்; குதிரை நீர் குடிக்க மறுத்து விட்டது; குதிரை அவளைத் தட்டி அவளுக்குக் குழிபறித்து விட்டது. கூனி படைத்த கைகேயி மாய்ந்து விட்டாள்; 'மாகயத்தி' என்று பேசப்பட்ட தீமை அவளிடமிருந்து நீங்கி விட்டது; மூவரில் ஒருத்தியாய் மாறி நின்றாள்; புதிய அலைகளில் அவளும் ஒரு மிதக்கும் சருகானாள்; பரதனுக்குக் கைகேயி மரவுரி எடுத்துக் கொடுக்க வரவில்லை; வற்கலையை அவனே உடுத்திக் கொண்டான்; தவக்கோலம் தாங்கி நின்றான்; முடியில்லாத துன்பத்துக்கு உறைவிடமானான்; தம்பியும் தவக்கோலம் பூண்டு, பரதனுக்கு ஓர் இலக்குவன் ஆனான்; இராமனை அழைத்து வருவது, அல்லது உயிர் விடுவது, அல்லது தாமும் தவம் செய்வது என்ற உறுதியோடு புறப் பட்டனர்; இராமன் இருக்கும் இடம் ஏசயமையா கையால் தேர் ஏறிச் சென்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் கொடுந் துன்பக் காட்டுக் குத்தான் அழைத்துச் செல்லும்.

– கவி தாம்ஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# ராஜபக்ஷ குடும்பத்தின் கதி அனைவருக்குமான பாடம்

இப்படியொரு நிலைமை ஏற்படுமென ஜனாதிபதி கோட்டாபய கனவிலும் நினைத்திருக்க மாட்டார். சீ இந்த ஜனாதிபதிப் பதவியை ஏன்தான் எடுத்தேன் என்று மனம் குழம்புகின்ற அளவில் கோட்டாபய ராஜபக்ஷவின் நிலைமை வந்துவிட்டது.

தவிர, ஜனாதிபதியாக யார் வரக்கூடாது என்று நினைத்தோமோ அவர் வந்துவிட்டார் என்று தமிழ் மக்கள் குமுறிக் கொண்டனர்.

இனி ராஜபக்ஷ ஆட்சியை அசைக்க முடியாது. எங்களின் அவலமும் விலகாது என்று நினைத்த தமிழ் மக்கள் ஏன்தான் இப்படிக் கடவுள் எங்களைச் சோதிக்கின்றான் என நொந்து கொண்டனர்.

ஆனால், அந்த இறைவன் பதவியைக் கொடுத்தும் பாடம் புகட்டுவான் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நடந்ததில் இருந்து இந்த உலகம் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆம், வன்னிப் பெருநிலப்பரப்பில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஆத்மாக்களின் சாபம். சரணடைந்தால் உயிருக்கு உத்தரவாதம் என்ற நம்பிக்கையோடு சென்றவர்களுக்கு செய்த கொடூரம்.

பாலகன் பாலச்சந்திரனுக்கு பிஸ்கட் கொடுத்துவிட்டு, அரக்கர் தாமும் செய்யத் துணியா அதர்மத்தைச் செய்த பழி.

விடுதலை கிடைக்காதா? என்று சிறைகளில் ஏங்கி ஏங்கி வாழ்வைத் தொலைத்து நிற்கும் தமிழ் அரசியல் கைதிகளின் பெருமூச்சு, காலமெல்லாம் ஆற்றாது அழுகின்ற தமிழ்த் தாய்மாரின் கண்ணீர்.

இன்னும் என்னென்ன கொடுமைகள் தமிழினத்துக்கு இழைக்கப்பட்டனவோ அவையெல்லாம் சேர்ந்து ராஜபக்ஷ குடும்பத்தை வேரறுக்கிறது.

உண்மை, விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து இந்த நாட்டில் அமைதியை நிலைநாட்டிய மன்னர்கள் என்ற பெயரோடும் புகழோடும் சிங்கள மக்கள் மத்தியில் இருந்தவர்களை; அதே சிங்கள மக்கள் கேளாக் கேள்வி கேட்டு நாட்டை விட்டுத் துரத்துகின்ற அளவுக்கு நிலைமை வந்ததென்றால் இதனை யார் செய்தார் என்று நினைக்க வேண்டாமோ.

அதோ! இயற்கை வடிவான இறைவன் தர்மத்தைப் பாதுகாக்கும்பொருட்டு அதர்மத்தை அழித்து நிற்கின்றான்.

அதுவே இலங்கைத் திருநாட்டில் நடந்து கொண்டிருக்கிறது.

இந்தத் தண்டனை ராஜபக்ஷ குடும்பத்துக்கு மட்டும் என்று யாரும் நினைத்து விடக்கூடாது.

மாறாக அக்கிரமம் செய்வோர், கிடைத்த பதவியை வைத்து மக்களை வதைப்போர், அரச கடமையைச் செய்யாது ஏமாற்றுவோர், கூலிக்கு மதம் பரப்புவோர், சமயநிந்தை செய்வோர், அரசியலில் நுழைந்து மக்களை ஏமாற்றுவோர், அறாவிலைக்குப் பொருட்களை விற்பனை செய்வோர், ஊழல் புரிவோர், இல்லாத பொல்லாத செய்திகளைப் பரப்புவோர் என யாரெல்லாம் இறை நீதிக்கு விரோதமாக நடக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இதே கதி அவரவர் தன்மைக்கேற்ப நடந்தாகும் என்பதை ராஜபக்ஷ குடும்பத்துக்கு நடந்த கதியிலிருந்து நாம் கற்றறிய வேண்டும்.

# யாழ். ஊடகவியலாளர்களுக்கு பொலிஸார் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கொக்குவில் அலுவலகத்துக்கு முன்பாக பொலிஸார் குவிக்கப்பட்டு நேற்றைய தினம் ஒரு குழப்பமான நிலை ஏற்பட்டது.

சமகால நிலைமைகள் தொடர்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரனின் ஊடக சந்திப்புக்காக ஊடகவியலாளர்கள் கட்சி அலுவலகத்துக்கு சென்றபோது பொலிஸார் அதற்கு அனுமதிக்காததால் குழப்பமான நிலைமை ஏற்பட்டது.

அங்கு சென்ற ஊடகவியலாளர்களின் பெயர் விபரங்கள் பதிவு செய்யப்பட்டு அடையாள அட்டைகள் பரிசோதித்து கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் ஊடக சந்திப்புக்களை நடத்த முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாருடன் பாராளுமன்ற உறுப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் அதிகளவில் பொலிஸாரும் குவிக்கப்பட்டதால் பதற்றமான நிலைமை ஏற்பட்டது. (ஞா-33,104)

# 12 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

(அராலி)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12 இந்திய கடற்தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை நெடுந்தீவு அருகே இந்திய கடற்தொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 12 கடற்தொழிலாளர்களையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட கடற்தொழிலாளர்களை ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. (ஞா-33,104)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் ஆர்க்லேன்- உடுவில், சங்குவேலி, உடுவில் மகளிர் கல்லூரி, சீனோர்- படகுதுறை - காரைநகர், கடற்படைத்தளம்- காரைநகர், காரைநகர் கடற்படை முகாம், இபோ.ச டிப்போ-காரைநகர், களபூமி, பாலக்காடு அம்மன் கோவிலடி- காரைநகர், தோப்புக்காடு, ஊரி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் சி. இ.சி.பி (சிலா வத்துறை), சிலாவத்துறை கடற்படை முகாம், அகத்தி முறிப்பு, அகத்தி முறிப்புத் திட்டம், அளவக்கை சிறுகுளம் திட்டம், அரிப்பு, அரிப்பு நீர்வழங்கல், ஆத்திமோட்டை, ஹனைஸ் நகர், கரடிக்குழி , காயக்குழி திட்டம், கொக்குப்படையான், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி நீர்வழங்கல் சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங்குளம், கூழாங்குளம் திட்டம் (ஜீநாத் நகர்), மடுக்கரை, மணற்குளம், மறிச்சுக்கட்டி, மருதமடு, மேதன்வெளி, முள்ளிக்குளம், முசலி தேசிய பாடசாலையடி, பெரிய பொள்ளாச்சி பொற்கேனி, பாலைக்குழி, பாலைக்குழித் திட்டம், பரிகாரிக்கண்டல், பெரிய பொள்ளாச்சி பொற்கேணி (பண்டாரவெளி), பிச்சைக்குளம், பிச்சைவாணி பங்குளம் திட்டம், பொன்தீவுகண்டல் கள்ளிமோட்டை புளியங்குளம், பொன்னாச்சி குளம், புதுக்காமம் கிராமம், புதுக்குடியிருப்பு (சிலாவத்துறை), புதுவெளி , சின்ன பொள்ளாச்சி பொற்கேணி திட்டம் , சிலாவத்துறை, சின்ன பொள்ளாச்சி பொற்கேணி, தம்பட்ட முசலி, வெள்ளிமலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் கூமரசங்குளம் மாதா கோவிலடி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## எண்ணத்தின் ஆற்றல்



ஒருவர் ஒரு திருவிழாவுக்குப் போக வேண்டுமென்று எண்ணுகிறார். அந்த எண்ணத்தில் ஒரு ஊர், அங்கு போகும் செயல், அங்கு காண விழையும் காட்சிகள், அனைத்தும் அகக்காட்சியாகின்றன.

இவ்வாறு புறமனத்தால் ஒரு எண்ணம் உருவாகும் போது அதற்கு வேண்டிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகிய எழுச்சிகள், உயிராற்றலின் இயக்க அலைகள் மூலம் ஏற்படுகின்றன. உயிராற்றலை மூளையின் சிற்றறைகளில் எத்தனை கோடி இணைந்து அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இவையாக மாற்ற முடியுமோ அத்தனையும் இணைந்து இயங்கியே ஒரு எண்ணத்தில் அக்காட்சி உருவாகின்றது. இவ்வாறு மூளையில் ஏற்படும் பதிவுகளும் பிரதிபலிப்புகளும் 'நடுமனமாகும்'. மேலும் இந்தப் பதிவுகள் வித்தணுக்களில் தரப் (மரபுப்) பதிவாக (Heriditary quality) பதிவு பெறுகின்றது இதுவே 'அடிமனமாகும்'. இந்த இயக்கத்தின் தொடராக உடலின் உயிராற்றல் அதிர்வு அலை இயக்கம் வேறுபட்டு உடல் முழுவதும் உள்ள அணு அடுக்குகளில் பதிவுகள் உண்டாகின்றன.

அது மட்டுமல்ல ஒருவர் ஓர் எண்ணம் எண்ணினால் அது பிரபஞ்ச சமஷ்டி உயிரோடு தொடர்பு கொண்டு எண்ணிறந்த மக்கள் மூளையிலும் பதிவாகின்றதோடு பிரபஞ்ச உயிரில் (universal soul) நிரந்தரப் பதிவாகவும் ஆகிவிடுகின்றது. இவ்வாறு ஒரு தடவை ஒருவர் எண்ணும் எண்ணத்தால் ஏற்படும் உடல், மூளை, தன்னுயிர், பிற உயிர், சமஷ்டி உயிர் பதிவுகள் திரும்பத் திரும்பப் பிரதிபலிப்பாகும் போது எண்ணம் தோன்றிய இடத்திலேயே அதிக ஆழமாகச் செயலாவது இயல்பு. சமுதாயத்தைப் பற்றியோ தனிப்பட்ட பிறரைப் பற்றியோ எண்ணும் எண்ணங்கள் உரியவரிடம் அதிக அழுத்தமாக திரும்பத் திரும்பப் பிரதிபலிக்கும்.

பல தடவை திருவிழாவிற்குப் போக வேண்டுமென்ற எண்ணம் பிரதிபலிக்கும்போது எண்ணத்திற்குச் செயலாற்றவல்ல போதிய வலுவு ஏற்பட்டுவிடும். இந்த எண்ணத்தால் ஏற்பட்ட உயிராற்றல் விரைவு அதிர்வு அலைகள் உடல் கருவிகளையெல்லாம் ஊக்கி எண்ணத்தைச் செயலாற்றத் தயார் நிலையை ஏற்படுத்திவிடும்.

பிறகு திருவிழாவிற்குப் போய் பார்த்துக் களிக்கும் செயல் மலர்கின்றது. அதனால் இன்ப துன்ப அனுபவங்கள் பதிவாகின்றன. இவ்வாறு செயலாகப் பதித்த எண்ணமும் செயலும் தேவையாக, பழக்கமாக, சூழ்நிலைக் கவர்ச்சியாக மாறி, அடிக்கடி மனிதனைச் செயல்படுத்துகின்றன. இந்த விளக்கத்தைக் கொண்டு ஒரு எண்ணம் எவ்வாறு பதிவு, பிரதிபலிப்பு, செயலாற்றல், இன்ப துன்ப விளைவுகள் என்ற நான்காக மாற்றம் பெறுகிறது என்பதை நன்குணரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 33

குழுவானது உள்ளூர் அதிகாரசபை எல்லைகள் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகள் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகள்) போன்றவற்றை விட பிரதேச செயலகங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது. அதே நேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை கூறு போடுவதை குறைப்பதற்கான தேவையையும் அறிந்துகொண்டது.

மேலும் இரண்டு சமர்ப்பிப்புகளிள் தேர்தல் தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகை கணிசமாக சமமற்ற நிலையில் உள்ளதை குழு அவதானித்தது அத்தோடு ஒரு சமர்ப்பிப்பு நிலத் தொடர்பற்ற பிரதேசங்களை இணைத்து தேர்தல் தொகுதி ஒன்று உருவாக்கப்படவேண்டுமென்று பரிந்துரைத்திருந்தது.

எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும்போது சேர்த்துக்கொண்டுள்ளது. மற்றும் தேர்தல் தொகுதிகளின் சனத்தொகை எண்ணிக்கையில் ஒத்திசையாத தன்மையைக் குறைப்பதற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட சராசரி விலகலின் வரம்புகளுக்குற்பட்டதாகவும். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற்கொண்டுள்ளது.

ஒரு பிரேரணை பரிந்துரைத்ததாவது திஸ்ஸ மஹாராம பாராளுமன்ற தேர்தல் தொகுதிக்கு (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுக்கு)ஒரு பல் அங்கத்தவர் கொண்ட தேர்தல் தொகுதி வேண்டும் என்பதே ஆகும். ஏனெனில் சிறுபான்மையின் (முஸ்லிம்களின்) சமூகவிருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதிசெய்வதற்காகவே.


ஆனால் குழு அவதானித்ததாவது முழு மாவட்ட சனத்தொகையிலும் முஸ்லிம்கள் 15.204 (2.5%) என்பதே ஆகும். அது ஒரு பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிக்குத் தேவையான சனத்தொகையில் 10% ஐ விட குறைவானதேயாகும். எனவே அந்த சமூகத்தின் சனத்தொகை சிறியதாக உள்ளதால் ஒரு பல் அங்கத்தவர் தேர்தல் தொகுதியில் சிறுபான்மையின் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்படுவது சாத்தியமற்றது என்பதை குழு அடையாளம் கண்டுகொண்டது.

ஒரு பிரேரணை அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரதேசத்தை ஒரு தேர்தல் தொகுதியாக பரிந்துரைத்திருந்தது ஏனெனில் முஸ்லிம் சமூகத்தில் இருந்து ஒரு மாகாணசபை உறுப்பினரை உறுதிப்படுத்துவதற்காக. ஆனால் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) இன்படி அம்பாந்தோட்டை பிரதேச செயலக பிரதேசத்தை ஒரு தேர்தல் தொகுதியாக மாற்றுவதற்கு போதிய அளவு சனத்தொகை இல்லை என்பதை குழு கண்டறிந்தது.

பெற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளில் 02 சமர்ப்பிப்புகளுக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை, ஏனெனில் அவை எந்தவித முன்மொழிவுக்ளையும் கொண்டிராதோடு ஒரு பிரேரனை மாகாணசபை உறுப்பினர்களின் தொகையினை அதிகரிப்பதை பற்றிக் கூறப்பட்டிருந்தது. அது குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாக அமையவில்லை.

சுருக்கமாகக் கூறினால் 8 பிரதேச செயலகங்கள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 4 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், தொகுதிக்கான சராசரி மக்கள் தொகைக்கு −4.1% மற்றும் + 3.9% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக் கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சம நிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து அம்பாந்தோட்டை மாவட்டம் 7 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

அவை வலஸ்முல்ல(109), வீரகெட்டிய(99), அம்பலாந்தோட்டை(56), அம்பந்தோட்டை(54), திஸ்ஸ மஹாராம(67), தங்காலை(81), பெலியத்த (110) தொகுதிகள் ஆகும்.அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (k2) இல் காட்டப்பட்டுள்ளது.




அட்டவணை-(k2) ஹம்பாந்தோட்டை மாவட்டதேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும்

| தேர்தல்தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வலஸ்முல்ல | 88915 | 82 | 41 | 8 | 89046 |
| வீரகெட்டிய | 81342 | 28 | 757 | 13 | 82140 |
| அம்பலாந்தோட்டை | 83117 | 296 | 374 | 1220 | 85007 |
| அம்பந்தோட்டை | 77772 | 952 | 4007 | 5603 | 88334 |
| திஸ்ஸமஹாராம | 84809 | 568 | 464 | 1852 | 87693 |
| தங்காலை | 83760 | 192 | 952 | 43 | 84947 |
| பெலியத்த | 82586 | 107 | 34 | 9 | 82736 |
| மொத்தம் | 582301 | 2225 | 6629 | 8748 | 599903 |

### வடக்கு மாகாணம் பற்றிய தகவல்கள்

பரப்பளவில் மூன்றாமிடத்தைக் கொண்டுள்ள வடக்கு மாகாணம் 8,884 சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பைக் கொண்டுள்ளது. அதில் 1025 சதுர கிலோ மீற்றர் யாழ்ப்பாண மாவட்டத்திற்குரியது. மன்னார் மாவட்டம் 1996 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. வவுனியா மாவட்டம் 1967 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் முல்லைத்தீவு மாவட்டம் 2617 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கிளிநொச்சி மாவட்டம் 1279 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளன. வடக்கு மாகாணம் இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 13.5 வீதத்தை கொண்டுள்ளது. வட மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பில் 8290 சதுர கிலோமீற்றர் தரையாகவும் 594 சதுர கிலோமீற்றர் உள்ளக நீரப் பரப்பாகவும் காணப்படுகின்றது.

மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் 6.7% உள்ளக நீர்ப்பரப்புக்களாக காணப்படுகின்றன. வடக்கு, கிழக்கு மற்றும் மேற்குத் திசைகளால் கடலையும் தெற்குத் திசையில் வடமேல், வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இந்த மாகாணத்தில் 2010 ஆம் ஆண்டளவில் 594 சதுர கிலோமீற்றர் அதாவது.6.7% வனப் பிரதேசமாகக் காணப்பட்டது.

**பரப்பளவில் மூன்றாமிடத்தைக் கொண்டுள்ள வடக்கு மாகாணம் 8,884 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. அதில் 1025 சதுர கிலோமீற்றர் யாழ்ப்பாண மாவட்டத்திற்குரியது. மன்னார் மாவட்டம் 1996 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. வவுனியா மாவட்டம் 1967 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் முல்லைத்தீவு மாவட்டம் 2617 சதுர கிலோமீற்றர் பரப்பையும் கிளிநொச்சி மாவட்டம் 1279 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளன.**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

அனைத்து ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கும் இன்று முதல் பாடசாலை விடுமுறை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 18ஆம் திகதி வரையில் இவ்வாறு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். (ஞா)

## நாடு முழுவதும்...

**வடக்கில் முடக்கம்**

நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் இன்று திங்கட்கிழமை காலை 6 மணி வரை நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் வடக்கு, கிழக்கிலுள்ள பெரும்பாலான பகுதிகள் வெறிச்சோடி காணப்பட்டன.

யாழ்ப்பாண நகருக்குள் நுழையும் பிரதான சந்திகள், வீதிகளில் பொலிஸார் ஆங்காங்கே நின்று வீதியால் செல்பவர்களை துருவித்துருவி விசாரித்து வந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இதேவேளை இலங்கை போக்குவரத்து சபை பேருந்து சேவை மற்றும் தனியார் போக்குவரத்து சேவை என்பன இடம்பெறவில்லை என்பதுடன் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

**தெற்கில் ஆர்ப்பாட்டம்**

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு மார்க்கஸ் பெர்ணான்டோ மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நேற்று ஒன்று திரண்டிருந்தனர்.

வெள்ளை நிற ஆடையை அணிந்திருந்த அவர்கள், ஜனநாயகத்தை நிலை நிறுத்துமாறு கோரியே அமைதியான முறையில், காரியாலயத்துக்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், காரியாலயத்தில் இருந்து வெளியேறியவர்கள் சுதந்திர மாவத்தை வரையிலும் பேரணியாக சென்றனர். அங்கு வீதித்தடை போடப்பட்டிருந்தது.

அதனையும் மீறி செல்வதற்கு முயன்ற போதே, அங்கு பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டது.

இதேவேளை, மஹரகமவில் பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டது. பௌத்த தேரர் உள்ளிட்ட ஒரு குழுவினர், பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். எங்களுக்கு எரிபொருள் இல்லை, பெட்ரோல் இல்லை, காஸ் இல்லை, எங்களுக்கு யார் சாப்பாடு கொண்டுவந்து தருவார்கள்.

நாங்கள் இவ்விடத்திலேயே நிற்கின்றோம். இருக்கும் இடத்தில் எங்களை இருக்கவிடுங்கள், உங்களுக்கு பொலிஸ் நிலையம் இருக்கிறது. எங்களுக்கு என்ன இருக்கிறது. வீட்டுக்குச் செல்லமுடியாது, பிள்ளைகள் பட்டினியில் வாடுகின்றனர். சாப்பாடு யார் கொண்டுவந்து தருவார்கள், நீங்கள் தருவீர்களா? என பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை கொழும்பின் பல பகுதிகளிலும் மற்றும் மஹரகம, பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் என நாட்டின் வடக்கு - கிழக்கு தமிழர் பகுதிகளைத் தவிர்த்து ஏனைய பகுதிகளில் அரசுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (ஞா)

## ஊரடங்கு...

இதன் காரணமாக நேற்று முன்தினம் மாலை 6 மணியிலிருந்து இன்று காலை 6 மணிவரை நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இன்று காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படுவதாக அரச தகவல் திணைக்களம் அறிவித்தல் விடுத்துள்ளது. (ஞா)

## ஒருவர்...

ளார்.

தற்கொலை செய்து கொண்டவர் 55 வயதுடைய ஆண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மின்வெட்டை உடனடியாக நிறுத்தக் கோரி அங்கிருந்த மின்மாற்றியில் ஏறிய அந்த நபர், அதிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்துகொண்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஞா)

## பாராளுமன்றம்...

பரிந்துரையை ஏற்று பாராளுமன்றத்தை கலைத்து பாகிஸ்தான் அதிபர் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் பணவீக்கம் அதிகரிப்பு, விலைவாசி உயர்வு ஆகியவற்றுக்கு பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான அரசு தான் காரணம் எனக் குற்றம் சாட்டி அவர் மீது எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவந்தன.

பாகிஸ்தானில் உள்ள 342 எம்.பிக்களில் 172 பேரின் ஆதரவை பெற்றால்தான் பதவியில் நீடிக்க முடியும் என்ற நிலை இம்ரான் கானுக்கு உள்ளது. ஆனால், இம்ரான் கானுக்கு அந்தளவு ஆதரவு இல்லை. எதிர்க்கட்சிகளுக்கு 177 எம்.பிக்கள் ஆதரவு உள்ளது. இதனால், இம்ரான் கான் ஆட்சி கவிழும் என்றே எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அத்துடன், பாராளுமன்றை கலைக்குமாறும் இம்ரான் கான் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

## இந்த அரசை...

களைச் சார்ந்த உறுப்பினர்களின் பங்கேற்புடன் கொழும்பு சுதந்திர சதுக்கத்துக்கு அருகில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் எதிர்பார்ப்பை தவிடுபொடியாக்கிய இந்த அரசை ஒரு கணமேனும் ஆட்சியில் தக்கவைக்க இந்நாட்டு மக்கள் தயாராக இல்லை.

இந்த அரசு ஜனநாயக ரீதியாக மக்கள் ஆதரவின் பெயரால் தூக்கியெறியப்படும். நாம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் முகமாக உறுதியாக முன் நிற்கின்றோம். இந்த அரசு நாட்டு மக்களை மயானத்தின் பக்கம் தள்ளிக்கொண்டிருக்கின்றது. இந்தக் காட்டுமிராண்டித்தனமான அரசை முற்றிலுமாக வீழ்த்தி தூக்கி எறிய வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## இடைக்கால...

இதற்கமைய நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காண்பதற்கு அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பிலான யோசனையை சமர்ப்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அவசரகால சட்டம் தொடர்பில் சர்வதேசம் கடும் அதிருப்தி

(கொழும்பு)

அவசரகால நிலைமை சட்டம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமைக்கு சர்வதேசம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டு, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் இவ்வாறு அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

குறித்த டுவிட்டர் பதிவில்,

"மக்கள் அமைதியான முறையில் எதிர்ப்பினை வெளியிடுவதற்கான ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்" என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையை ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாகக் கண்காணித்து வருவதாகவும் அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை அவசரகால சட்ட நிலைமை அமுல்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் அவரது டுவிட்டர் பதிவில்,

"அவசர நிலைமை ஏற்பட்டுள்ளமை இலங்கை மக்களுக்கேயன்றி அரசாங்கத்திற்கு அல்ல. மக்கள் எதிர்கொண்டுள்ள அவசரகால நிலைமையின் அடிப்படையிலேயே அவர்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். மாறாக அவர்கள் வீதிக்கு இறங்கியமையால் அவசரகால நிலைமை ஏற்படவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். (ஞா)

# முள்ளியவளையில் வாள்வெட்டு

### 7 பேர் காயம்; 3 பேர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முள்ளியவளை பகுதியில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான வாள்வெட்டு சம்பவத்தின்போது காயமடைந்த எழுவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் நேற்று முன்தினம் மாலை இந்த வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்திற்கு அருகில் இரு இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு வாள்வெட்டில் முடிந்துள்ளது.

இந்த வாள்வெட்டு சம்பவத்தின்போது 4ஆம் வட்டாரம் முள்ளியவளை பகுதியினை சேர்ந்த நான்கு பேர் வாள்வெட்டிற்கு இலக்காகியுள்ளதுடன், மேலும் காயமடைந்த மூவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் காயத்துடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (ஞா)

# ராஜபக்ஷ அரசுக்கு எதிராக கிளிநொச்சியில் போராட்டம்

(முறிகண்டி)

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகம் முன்பாக போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டம் நேற்று மாலை 5.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியதுடன், பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்கலைக்கழக வீதி ஊடாக ஏ9 வீதியை வந்தடைந்ததுடன், வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட முற்பட்ட நிலையில் பொலிஸார் தடுத்தனர்.

குறித்த போராட்டத்தை பார்வையிட வருகை தந்த மக்கள் பொலிஸாரால் விரட்டியடிக்கப்பட்டனர். போராட்டக்காரர்களை கட்டுப்படுத்தாது, பார்வையிட்ட தம்மை விரட்டியடித்த பொலிஸாரின் செயற்பாடு தொடர்பில் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (ஞா-100,316)

அத்துடன், முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுடன், வாசுதேவ நாணயக்கார மற்றும் டிரான் அலஸ் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (ஞா)

## அமைச்சர்கள்...

நேற்றிரவு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அறிவிப்பை அமைச்சர்கள் ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அமைச்சர்களான நாமல் ராஜபக்ஷ, அலி சப்ரி ஆகியோர் தமது பதவி விலகலை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிராக பொதுமக்களின் போராட்டம் வலுவடைந்துள்ள நிலையிலேயே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து பதவியில் நீடிப்பார் எனவும் ஏனைய அமைச்சரவை அமைச்சர்களின் இராஜினாமா கடிதங்கள் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன [illegible] தெரிவித்துள்ளார். (ஞா)

## பிரதமர் பதவி...

சரவை தொடர்கிறது என்று அரசியலமைப்பு விபரித்துள்ளது.

அமைச்சர்கள் பதவி விலகினால் அல்லது அதனை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அமைச்சரவை கலைக்கப்படுவதற்கு பிரதமர் பதவி விலக வேண்டும் என்று அரசியலமைப்பின் 49ஆவது பிரிவு தெரிவித்துள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நீடிக்க முழு அமைச்சரவை அமைச்சர்களும் பதவியை துறப்பதாக கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

கடிதத்துடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளார்.

இதேவேளை, அரசியலமைப்பின்படி அமைச்சர்கள் தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடமே ஒப்படைக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 55 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 200 தென்னைகள் உள்ளன.

(10900)

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை ரூ.450,000

**ஜெயம் - 077 814 7389**
**077 805 1655**

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

**அருள்**

| | | |
|---|---|---|
| இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. |

தொ.பே:- 076 443 1576 (C-4111)

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10902)

**076 825 7716** (ஆகாஸ்)

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (10897)

---

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஏ-09 றோட்டின் முகப்பில் இருந்து இரண்டாவது காணி (50 மீற்றர் தூரம்)
- பிள்ளையார் வீதியில் (பெற்றோல் நிரப்பு நிலையம் அருகாமை வீதி)
- 20 அடிப் பாதையுடன்

(10860)

**077 623 4204**

---

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 70 பரப்புக் காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)

- மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை.
- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் – பூநகரி பிரதான வீதியில் (A32) இலிருந்து 200m தூரத்தில்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 2½ Km தூரம் (A9)
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி (நல்ல சூழல்)
- 16 அடி பாதையுடன்

(10860)

ஒரு பரப்பின் விலை -
3 இலட்சம் மட்டும் (300,000)

**074 291 3725, 074 291 3726, 074 291 3727**

---

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4072)

VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777**

---

## ஆசிரியர்கள் தேவை

தெல்லிப்பளையில் இயங்கும் புதிய கல்வி நிலையம் ஒன்றுக்கு தரம் 1 - 5 வரை 5 பாடங்களுக்கும் தரம் 6 - 11 வரை விஞ்ஞானம், ICT, வணிகக் கல்வி, புவியியல் பாடங்களுக்கும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். (10888)

**077 834 3666**

---

## ஊர் கோழி குஞ்சுகள்


- 1 நாள் குஞ்சு - 100/=
- 2 கிழமை குஞ்சு - 150/=
- 1 நாள் வான்கோழி குஞ்சு - 350/=
- 1 நாள் வெள்ளடியன் - 350/=
- காடை குஞ்சு - 35/=

**077 332 2433** (10895)

*Rani Farm*
Reg:-VW/FIN/BR/1/22/2018
Pannagam, chulipuram, Jaffna.
0773322433

---

# காணி விற்பனைக்கு




**யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் 147 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- A-9 பிரதான வீதியில் அமைந்துள்ளது.
- நிறுவனங்கள், சுற்றுலாத்தலங்கள் மற்றும் திருமண மண்டபம் அமைப்பதற்கு ஏற்ற இடம்.
- நல்ல தண்ணீர்.

**ஒரு பரப்பின் விலை - 10 இலட்சம் ரூபாய்**
**10,00,000/=**

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு (10901) தரகர் தேவையில்லை

**ஜெயம் : 077 241 7589, 077 805 1655**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.